# ‘மார்பக புற்று நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை 2015-ல் 2.5 லட்சமாக உயரும்’

தாம்பரம்,நவ.10: இந்தியாவில் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை 2015-ம் ஆண்டில் 2.5 லட்சமாக அதிகரிக்கும் என்று அடையாறு புற்று நோய் மருத்துவமனை தலைவர் டாக்டர் வி.சாந்தா தெரிவித்தார்.

புற்றுநோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடந்தது. அடையாறு புற்றுநோய் மருத்துவமனை தலைவர் டாக்டர் வி.சாந்தா நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்துப் பேசியது:

மக்கள் அதிகளவில் புற்று நோய் போன்ற பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

பெண்களை தாக்கும் புற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு தேவை. பெண்கள் பலர் சர்க்கரை நோய், கருப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய்களால் பாதிக்கப்படுகின்றனர். மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்தால் முழுவதுமாக குணப்படுத்த முடியும்.

ஐ.நா., சபை இந்தாண்டை மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு ஆண்டாக அறிவித்துள்ளது.



புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கில் மாணவர்களுக்குப் பரிசு வழங்குகிறார் அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் வி.சாந்தா. உடன் (வலமிருந்து) பி.தங்கராஜு, ஜேம்ஸ்பாண்டியன், எம்.பொன்னவைக்கோ, டாக்டர் கிரிஷ், சந்திரபிரபா, டாக்டர் சிவசேகரன்.

இந்தியாவில் ஒரு லட்சம் பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது, 2015-ம் ஆண்டில் இரண்டரை லட்சமாக அதிகரிக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் கர்ப்பப் பை வாய் புற்றுநோய்க்கு அடுத்ததாக மார்பக புற்று நோய் பெண்களை அதிக அளவில் பாதிக்கிறது. அமெரிக்க உணவுப் பழக்கவழக்கங்கள் இந்தியாவிலும் கடைப்பிடிக்கப்படுவதால், அமெரிக்காவைபோல் இந்தியாவிலும் சில ஆண்டுகளில் புற்றுநோய் தாக்கம் அதிகமாகும் என கண்டறியப்பட்டுள்ளது என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில், எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக துணை வேந்தர் எம்.பொன்னவைக்கோ, டாக்டர் சிவசேகரன் மற்றும் மாணவர்கள் பலர் பங்கேற்றனர்.

# கோலாலம்பூர் விமானம் தாமதம்: பயணிகள் அவதி

பிகாசஸ் அசெட்